2022-2025-ஆம் ஆண்டுக்கான பால் சேகர வழித்தட வாகன டெண்டர் நிபந்தனைகள்:

1. ஒப்பந்தக்காலம் ஒப்பந்தப்பணி மேற்கொள்வதற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து மூன்றாண்டு காலம் ஆகும். ஒப்பந்தகாலம் முடிவுற்று, அடுத்த வாகன ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை அல்லது ஒன்பது மாதங்கள் வரை இவற்றுள் எது முந்தையதோ அதுவரை ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

2. ஒப்பந்ததாரர், ரூ.11/- (ரூபாய் பதினொன்று மட்டும்) செலுத்தி இவ்வொன்றியத்தின் இணை உறுப்பினராக வேண்டும். (இத்தொகை திருப்பித் தரக்தக்கதல்ல) ஒப்பந்ததாரருக்கு இவ்வொன்றியத் தேர்தலில் வாக்களிக்கவோ ஒன்றிய லாபத்தல் பங்கு பெறவோ உரிமை இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

3. டெண்டர் விண்ணப்ப படிவத்துடன் முன் வைப்புத் தொகையாக (**EMD**) பால் சேகர/மொத்த பால் குளிரூட்டு நிலைய வழித்தடத்திற்கு ரூ.20,000/-ம், டாக்ஸி வழித்தடத்திற்கு ரூ.10,000/- தனித்தனியாக வரைவோலை இணைக்கப்பட வேண்டும். டெண்டர் ஏற்பு ஆணை வழங்கப்படும் பட்சத்தில் முன் வைப்புத் தொகை பிணை வைப்புத் தொகையாக ( **Security Deposit**-) கணக்கில் கொள்ளப்படும் என்பதையும், பிணை வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் தரப்பட மாட்டாது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.

4. பிணை வைப்புத் தொகை ( **Security Deposit** ) ஒப்பந்தகாலம் முடிந்து ஆறு மாத காலத்திற்கு பின் 50% தொகையும் மீதித்தொகை ஒன்றியத்தில் ஒப்பந்தகாரருக்கான கணக்கு நேர் செய்யப்பட்டு அவ்வாண்டு இறுதித்தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கை வெளியிட்ட பின்புதான் திருப்பி தரப்படும் என்பதையும் வைப்புத் தொகைக்கு வட்டி எதுவும் வழங்கப்பட மாட்டாது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.

5. ஒப்பந்ததாரர், அவரது ஒப்பந்தபுள்ளி ஏற்பு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்த விதிகளை முழுமையாக ஏற்றுக் கொண்டமைக்கு அத்தாட்சியாக ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் ஒப்பந்த விதிமுறைகளை தட்டச்சு செய்து, இவ்வொரு தாளிலும் ஒப்பம் இட்டு இவ்வொன்றியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பத்திரம் வழங்கிய பின்னரே முதல் போக்குவரத்து கட்டணம் வழங்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

6. ஒப்பந்ததாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ ஒப்பந்த சட்ட திட்டங்களை **(Terms and conditions)** முழுமையாகவோ அல்லது ஏதாவது ஒன்றையோ பின்பற்றத் தவறி அதனால் ஒன்றியத்திற்கு நிதியிழப்பு ஏற்படின் பிணை வைப்புத்தொகை முழுமையாக முடக்கப்பட்டு திரும்ப வழங்கப்பட மாட்டாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

7. ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்த டெண்டர் நிபந்தனைகளை மீறும்போது ஒன்றியத்திற்கு திருப்திகரமாக இல்லையென்க் கருதினாலும் அல்லது நிர்வாக காரணங்களை முன்னிட்டும் ஒன்றியத்தில் பொது மேலாளரால் டெண்டர் ரத்து செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

8. ஒப்பந்ததாரர் ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் சேமிப்புக்கணக்கு ஆரம்பித்து வங்கி கணக்கு எண்ணை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும். போக்கு வரத்துக் கட்டணம் அவரது வங்கிக்கணக்கில் 15 நாட்களுக்கு ஒருமுறை இருசால் செய்யப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

   அ. ஒப்பந்த வாகனமும் அதில் பணிபுரியும் ஊழியர்களும் மோட்டார் வாகனச்சட்டத்திற்கும் அதில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களுக்கும் உட்பட்டு பணியிடத்தில் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

   ஆ. ஒப்பந்தப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதிவு எண் கொண்ட வாகனம் மோட்டார் வாகனக்காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் ஒப்பந்த காலத்திற்கு முழு காப்பீடு செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

   இ. ஒப்பந்தம் பெறப்பட்ட வாகனத்தில் வெயில், வெப்பம் போன்ற இயற்கை இடர்பாடுகளினால்

ஒப்பந்ததாரர் கையொப்பம்

பாலின் தரம் மற்றும் சங்க, ஒன்றிய இதர இனங்களின் பொருட்களுக்கு ஊறு விளைவிக்கா வண்ணம் ஊர்தியின் மூன்று பக்கவாட்டிலும், மேல் கூரையும் முழுமையாக இயற்கை இடர்பாடுகளின் தாக்கம் ஏற்படாவண்ணம் தார்பாலினால் பராமரிக்கவும். அவ்வாறு மேல கூரை இல்லாமல் உரிய கால அட்டவணைப்படி வாகனம் இயக்கினாலும் நாள் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் அபராதமாக வாகன வாடகை ஒப்பந்தத் தொகையில் பிடித்தம் செய்யவும், பால் தரம் குறைவு மற்றும் இதரப் பொருட்களுக்கான இழப்பீடு முழுமைக்கும் உரிய தொகை முழுவதும் வசூல் செய்யவும் ஒப்புக் கொள்கிறேன்.

ஈ. வாகனத்தில் பால் ஏற்றவும் இறக்கவும் ஏதுவாக வாகனத்தின் உள்புறம் விளக்கு பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

வாகனங்களின் நான்கு புறங்களிலும் "ஆவின் ஒப்பந்த வாகனம்" என்று பொரிய எழுத்துக்களில் தெளிவாக என் சொந்த செலவில் எழுதப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

9. ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனத்திற்கும் அதற்கு நிர்ணயம் செய்யப்பட்ட எடை, திறன் அளவிற்கு பால் கேன் மற்றும் ஒன்றியத்தில் அனுப்பப்படும் இதர பொருட்கள் அவசியம் ஏற்றிச் செல்ல வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஒப்பந்தப்படி அதிகபட்ச எடை, திறன் அளவிற்கு, அதிகமான எடை, திறன் அளவுள்ள வண்டிக்கு ஒப்பந்தம் கோரி பெற்றிருந்தால், அதே வண்டியை ஓட்டி பால் அதிகமாகும் பட்சத்தில் வண்டியினுடைய முழுத் திறன் அளவிற்கும் அதிக கட்டணம் இன்றி பால் சேகரம் செய்து வரவும் ஒப்புக் கொள்கிறேன்.

10. எங்களுக்கு வழங்கப்பட்ட பால் வழித்தடத்தில் பால் கொள்முதல் செய்ய செல்லும் போதோ, வரும்போதோ மோட்டார் வாகன பராமரிப்பு சட்டத்தினால் (எம்.வி.ஆக்ட்) சுமை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள எடைக்குட்பட்டு அவசியம் மற்றும் அத்தியாவசிய தேவைக்கு தற்காலிக ஏற்பாடாக பால் வினியோகத்திற்காக பாலையும் எடுத்துச் சென்று வினியோகம் செய்ய மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு உத்தரவிட திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு முழு உரிமை அளிக்கிறேன். மேலும் தொழிலாளர் சட்டம் மீறப்பட்டாலும் அதன் மீது உத்தரவு பிறப்பிக்க ஒன்றியத்திற்கு முழு உரிமை அளிக்கிறேன்

11. ஒப்பந்தக்காரர் நிர்வாகக்காரணங்களுக்கேற்ப அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் வழித்தடத்தின் கால,தூர அட்டவணைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

12. ஒப்பந்ததாரர், காலை,மாலை இரு வேளைகளிலும் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடத்திலுள்ள சங்கங்களிலிருந்து பாலை சேகரம் செய்து, அவ்வழித்தடம் இணைக்கப்பட்டுள்ள பால் பண்ணை/பால் குளிரூட்டும் நிலையம் / மொத்த பால் குளிர்விப்பான் நிலையததிற்கு ஒன்றியத்தால் வழங்கப்பட்ட கால வரையறைக்குள் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என ஒப்புக்கொள்கிறேன்.

13. ஒப்பந்ததாரர் பால் பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம் / மொத்த பால் குளிர்விப்பான் நிலையங்களிலிருந்து இரு வேளைகளிலும் காலி கேன்களை பெற்று சங்கங்களுக்கு வழங்க வேண்டும். மேலும் டிரக் லைன் சீட்டில் கையொப்பனம் பெற்று ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ப்பதை ஒப்புக்கொள்கிறேன்.

14. ஒப்பந்த வாகனத்தில் பால் கேன்களுடன் பயணிகள், கால்நடைகள் அல்லது மற்ற பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடாது. அவ்வாறு ஏற்றிச்செல்வது தெரிய வந்தால், அந்த நேரத்திற்கான **(Shift)** போக்குவரத்துக் கட்டணம் வழங்கப்பட மாட்டாது. மற்றும் தண்டத்தொகை வசூலிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

15. வாகனத்தின் துப்புரவாளர் எப்போதும் வாகனத்தின் பின்புறத்தில்தான் இருக்க வேண்டும். வாகனம் இயக்கப்படும் போது ஓட்டுநர் மற்றும் துப்புரவாளர், புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற ஒழுங்கீன செயல்களில் ஈடுபடக்கூடாது. அவ்வாறான ஒழுங்கீன செயல்கள் செய்வது ஒன்றியதிதின் கவனத்திற்கு வரும் போது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் தண்டத்தொகை வசூலிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

16. நிர்வாக கா்ரணமாக பால் பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம் / மொத்த பால்

ஒப்பந்ததாரர் கையொப்பம்

குளிர்விப்பான் நிலையங்களுக்கிடையே பாலினைக் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் அவ்வித மாற்று வழித்தட ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொள்கிறேன் என்றும் அதற்காக வாடகைக் கட்டணம் ஒப்பந்தப்புள்ளிகளில் கொடுக்கப்பட்டுள்ளத் தொகைக்கு ஒப்புக் கொள்கிறேன். ஒப்புக்கொள்ள மறுக்கும் பட்சத்தில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டால் அதற்கான முழுச் செலவுத் தொகையையும் ஏற்றுக் கொள்ளவும் ஒப்புக் கொள்கிறேன்.

17. ஒப்பந்த வாகனம் இயக்குவது சம்பந்தமாக ஒன்றியம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

18. பொது வேலை நிறுத்தம், அரசு வேலை நிறுத்தம், கலகம், வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்களால் போக்குவரத்து பாதிக்கப்பட்டாலும், பால் சேகரத்திற்கான மாற்று வழிகளை கடைப் பிடித்து பால் சேகரம் / விற்பனைக்கு எந்த பாதகமும் இன்றி செயல்படுவது எனது கடமை என ஒப்புக் கொள்கிறேன்.

19. ஒன்றியத்திலிருந்து வழங்கப்பட்ட கால நேர அட்டவணையின்படி சங்கங்களிலிருந்து பாலை கொள்முதல் செய்து ஒன்றியத்தில் ஒப்படைக்க வேண்டும். மீறினால் அபராதம் விதிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

20. ஒப்பந்ததாரர் காலதூர அட்டவணைப்படி சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நேரம் கடந்து நிலையத்திற்குச் சென்று பால் கெட்டுப்போனாலோ அல்லது சங்கங்களிடமிருந்து பால் சேகரம் செய்ய தவறினாலோ கீழ்கண்டவாறு வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

    அ. ஒப்பந்த வாகனம் நிலையத்திற்கு தாமதமாக வந்து அதனால் பால் கெட்டு விட்டால் அதன் மொத்த கிரயத் தொகை போக்குவரத்து வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

    ஆ. ஒப்பந்த வாகனம் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிலையத்தைச் சென்றடைந்தாலும் மேற்புறம் மூடப்படாமல் இருந்து பால் கெட்டு விட்டால் அதற்குரிய இழப்புத்தொகை போக்குவரத்து வாடகை கட்டணத்தல் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

    இ. சங்கத்திலிருந்து பால் சேகரம் செய்யாமல் வரும் பட்சத்தில், அந்த சங்கத்திற்கு முந்தைய வேளையில் பால் வழங்கிய மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் போக்குவரத்து வாடகைப்பில்லில் பிடித்தம் செய்து அச்சங்கங்களுக்கு வழங்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

    ஈ. பாலை வண்டியில் ஏற்றும் போதும், இறக்கும் போதும் போக்குவரத்திலும் பால் சிந்தி விட்டால் அதன் கிரயத்தொகை போக்குவரத்து வாடகை கட்டணத்தில் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

21. ஒப்பந்தக் காலத்தில் பால் வழித்தடத்தினை மாற்றி அமைக்கவோ, தடத்தின் தூரத்தை கூட்டவோ, குறைக்கவோ இவ்வொன்றியத்திற்கு முழு உரிமை உண்டு என்பதையும் மாறுதல் குறித்து விபரம் கிடைத்தவுடன் உத்தரவிற்கு இணங்க வாகனம் இயக்க ஒப்புக் கொள்கிறேன்.

22. சங்கங்கள், பால் பண்ணை மற்றும் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து பால் ஏற்றும் / இறக்கும் மையங்கள், கேன் மற்றும் காலி கேன்களை வண்டியில் ஏற்றவும், இறக்கவும் தமது சொந்த செலவில் நபர்களை ஒப்பந்தக்காரர் நியமித்துக் கொள்ளவும், மேலும் பால் கேன்கள், காலி கேன்கள் போன்றவை மிகவும் கவனத்துடன் கையாளப்படவும், அசிரத்தையால் பாலுக்கோ, பால்கேனுக்கோ ஊறுகள் ஏற்பட்டால் ஒப்பந்தகாரராகிய நானே முழு பொறுப்பு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

23. சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலின் அளவு, கேன்கள் எண்ணிக்கை மற்றும் நேரம் முதலியவற்றை சம்பந்தப்பட்ட எடை சீட்டில் சங்க அலுவலரே பூர்த்தி செய்ய வேண்டும் என்பதையும் எக்காரணத்தைக் கொண்டும் வண்டி ஓட்டுனரோ, கிளீனரோ பூர்த்தி செய்யக் கூடாது என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

24. ஏதாவது காரணங்களால் சங்கத்திலோ / சங்கங்களிலோ பாலை ஒப்பந்த வாகனத்தின் மூலம் எடுத்து வரத்தவறி சங்கங்கள் பெரு நோக்குடன் சங்கங்களின் பொறுப்பில் குளிரூட்டும் நிலையம், பால் பண்ணையில் கொண்டு வந்து சேர்க்க முயற்சித்து பால் கெட்டுப் போகும் தருணத்தில் பாலின் கிரயம் மற்றும் சங்கத்தினரால் செலவழிக்கப்படும் செலவு ஆகியவற்றிற்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பேற்க நேரிடும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

25. ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கும், சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கும் வாகனத்தில் அனுப்பப்படும் கேன்கள் மற்றும் கேன் மூடிகளுக்கு முறையான கணக்கு பராமரிக்கப்பட வேண்டும். கேன்கள் மற்றும் கேன் மூடிகள் தொலைந்து விட்டாலோ அல்லது குறைவு ஏதேனும் ஏற்பட்டாலோ அல்லது சேதாரம் ஏற்பட்டாலோ அதற்கான இழப்புத்தொகை ஒப்பந்ததாரரது போக்குவரத்து பில்லில் பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

26. பால் வழித்தடங்களின் மூலம் சங்கங்கள், ஒன்றிய பாலகங்கள், விற்பனை இடங்கள் ஆகியவற்றிற்கு ஒன்றியத்தில் இருந்து அனுப்பப்படும் பரிசோதனைக் கருவிகள், இரசாயனப் பொருட்கள், தபால்கள், பதிவேடுகள் மற்றும் காசோலை போன்றவைகளையும், அவசர மற்றும் அவசிய தற்காலிக ஏற்பாடாக பால் உபபொருட்களை ஒன்றியத்திலிருந்து எடுத்துச் சென்று வழித்தடத்திற்கு உட்பட்டு ஒன்றியம் தெரிவிக்கும் இடத்தில் ஒப்படைக்க வேண்டும் என்பதையும் இவற்றிற்கு தனிக் கட்டணம் கிடையாது என்பதையும் மேற்படி பொருட்களுக்கு வண்டி செல்லும்போது ஏதாவது சேதம் ஏற்படுமாயின் சேதமடைந்த பொருட்களின் கிரையம் ஒப்பந்தக்காரரிடமிருந்து வசூலிக்கப்படும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

27. மாநில மற்றும் மத்திய அரசுகளின் போக்குவரத்து விதிகளுக்குக் கட்டுப்பட்டு வாகனத்தை பராமரிப்பது மற்றும் சரியாக ஓட்டுவது போன்றவை ஒப்பந்தக்காரரின் சொந்தப் பொறுப்பாகும் என்பதையும் மேற்கண்ட விதிகளில் தவறினால் ஒன்றியத்தினை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதையும் விதிகள் சரிவர கடைப்பிடிக்காமல் அதனால் வண்டி தாமதப்பட நேர்ந்து பால் கெட்டு விட்டாலும் பாலின் கிரயத் தொகைக்கு ஒப்பந்தக்காரரே பொறுப்பேற்க நேரிடும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

28. ஒப்பந்த வாகனம் இயக்கும்போது சம்பந்தப்பட்ட ஓட்டுநர் மற்றும் வாகன உதவியாளரைத் தவிர ஒப்பந்த வாகனத்தாரர் பொறுப்பில் வேறு யாரும் பயணம் செய்தல் கூடாது என்பதையும், வாகனத்தில் எவ்விதத்திலாவது சங்கங்களில் இருந்து அனுப்பப்படும் பாலுக்கான தரம், அளவு குறைவு, ஒன்றிய கௌரவ நிகழ்வுகள் ஏற்பட காரணமாக இருந்ததற்கான காரண காரணங்களுக்கான முகாந்தரம், விசாரணை முடிவுகள் தெரிய வந்தால் அதற்கான இழப்புக்கு, பொறுப்புக்கு, அபராதம் என நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கைக்கும், ஒப்பந்தத்தை இரத்து செய்வது போன்ற நடவடிக்கைக்கும் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

29. ஒன்றியத்தைச் சேர்ந்த ஒப்புதலளிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஒன்றியத்தைச் சார்ந்த பொருட்கள் தவிர பிற நபர்களோ, பொருட்களோ பால் வண்டியில் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றக் கூடாது என்பதையும், தவறினாலோ இது பற்றி நேரில் ஒன்றிய அலுவலர்களால் கண்டுபிடிக்கப்பட்டாலோ அன்றைய தின வாடகைப் பணம் பெறும் தகுதியை ஒப்பந்தக்காரர் இழக்க நேரிடும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

30. பால் வண்டியின் கிளீனர், வண்டியில் பின்புறம் அமர்ந்து வரவும், பால் கேன்கள் வண்டி ஓட்டத்தின்போது கவிழ்ந்து பால் சேதாரம் ஏற்பட்டு விடாமல் பாதுகாப்பாக கவனித்துக் கொள்ள வேண்டியது எனது பொறுப்பு என்பதையும் ஒன்றியத்தின் அலுவலர்கள் மற்றும் சங்க சிப்பந்திகளிடம் வண்டியின் ஓட்டுநர் மற்றும் கிளீனர் நாகரீகமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அவர்களது நடத்தை சரியில்லையெனக் கருதி குறிப்பிட்ட நபர்களை பால் வண்டியில் செல்ல அனுமதிக்கக் கூடாது என உத்தரவிட ஒன்றியத்திற்கு உரிமை உண்டு என்பதையும் ஒன்றிய உத்தரவிற்கு கட்டுப்பட்டு பணியாளர்களை மாற்றியமைக்க ஒப்பந்தக்காரராகிய நான் ஒப்புக் கொள்கிறேன்.

31. ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனம் எந்த வகையான வாகனம் என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோ, அதைத்தான் ஒப்பந்த காலம் முடியும் வரை குறிப்பிட்ட ஒப்பந்த வழித்தடத்தில் ஓட்ட வேண்டும் என்பதையும் இதை மீறினால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய பொது மேலாளருக்கு அதிகாரம் உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

32. ஒப்பந்தம் செய்யப்பட்ட வாகனத்தைக்கொண்டு ஒன்றியம் அங்கீகரித்த கால தூர பட்டியல்படி மட்டுமே இயக்க வேண்டும். ஒரு பகுதிக்கு அங்கீகரிக்கப்பட்ட வாகனமும், மறு பகுதிக்கு

ஒப்பந்ததாரர் கையொப்பம்

மாற்று வாகனம் அல்லது வேறு வழிகளில் பால் சேகரம் செய்யக்கூடாது. அவ்வாறு இயக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால், ஒப்பந்த வாகனம் இயக்கப்படாத தூரத்திற்கான கட்டணம் வழங்கப்படாது எனவும், வாகன இயக்கிய ஒப்பந்த காலம் முழுமைக்கும் இந்த தூரம் கணக்கிட்டு ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்படும். மேலும் ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

33. ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஒரு வாகனத்தை வைத்து ஒரு வழித்தடத்தில் மட்டும் பால் சேகரம் செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

34. ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட வாகனம் பழுதடைந்தால் தன் சொந்த பொறுப்பில் மாற்று வாகனம் இயக்குதல் வேண்டும். அதற்காக கூடுதல்கட்டணம் ஏதும் வழங்கப்பட மாட்டாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

35. ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட வாகனத்தை மட்டுமே இயக்க வேண்டும். தவிர்க்க இயலாத காரணங்களான விபத்து, தகுதிச்சான்று பெறுதல் போன்ற சமயங்களில் ஒன்றிய பொது மேலாளரின் முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்கப்படலாம். முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்கப்படுமாயின் நாளொன்றுக்கு ரூ.100/- வீதம் அபராதத்தொகை வசூலிக்கப்படும் என்ப்தை ஒப்புக்கொள்கிறேன்.

36. முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்பட்டாலும் ஒப்பந்தத்தில் உள்ள இதர அனைத்து நிபந்தனைகள் பொருந்தும். மாற்று வாகனம் இயக்க அதிக பட்சமாக 30 நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அசாதாரமாண நிகழ்வுகளுக்கு விதிகளுக்குட்பட்டு 30 நாட்களுக்கும் அதிகமாக நிர்வாக அனுமதியுடன் மாற்று வாகனம் இயக்க அனுமதிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

37. <u>மாற்று வாகனம், மாற்று ஏற்பாடாகக் கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படும்</u>:

அ) ஒப்பந்த வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் அவருடைய பெயரில் அங்கீகரிக்கப்பட்ட சுமை ஏற்றுவதற்கான் கொள்ளளவு மற்றும் மாடல் உள்ள மாற்று வாகனம் ஒன்றிய அனுமதி பெற்று இயக்க அனுமதி வழங்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

ஆ) ஒப்பந்ததாரர் ஒ்பந்தக் காலத்தில் இறக்கும் பட்சத்தில் அவரின் சட்டபூர்வமான வாரிசுதாரர்கள் மட்டுமே வாகனத்தை தொடர்ந்து இயக்க முன்வரும் பட்சத்தில் ஒன்றிய விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

இ) இயக்கப்படும் வாகனம் ஒப்பந்ததாரர்ன் சட்டப்பூர்வ வாரிசுதாரரின் பெயரில் மாற்றம் செய்வித்து இருக்க் வேண்டும் என்ப்தை ஒப்புக்கொள்கிறேன்.

38. வாகன டிாப் ஷீட் மற்றும் இதர சட்டபூர்வ ரிக்கார்டுகளை ஒப்பந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

39. உத்தரவில் தெரிவிக்கப்பட்ட அட்டவணைப்படி பால் பண்ணை / பால் குளிரூட்டும் நிலையம்/மொத்த பால் குளிர்விப்பான் நிலையம் பால் சேகரம் செய்து வந்தடைந்த நேரம் அவ்வப்போது வண்டி உரிமையாளர் மற்றும் ஓட்டுனர்களால் பராமரிக்கப்பட்டு வரும் (ஜி.வி.ஆர்) பொது வாகன பதிவேட்டில் பின்புறத்தில் இளநிலை பால்பத அலுவலர் அல்லது பொறுப்பான அலுவலர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்படும் என்பதையும் பொது வாகன பதிவேட்டில் (ஜி.வி.ஆர்) ஊர்தி ஓட்டுனர் காலையிலும் / மாலையிலும் புறப்படும் இடம், வந்தடையும் இடம், தூரம், ஒப்பந்த வண்டி எண், ஏற்றப்படும் பொருட்கள் (பால்) பாலின் எடை, ஊர்தி உரிமையாளர் பெயர் குறிப்பிட வேண்டும் என்பதையும், வாடகை பட்டியல் அனுப்பும்போது ஜி.வி.ஆர். நகல்கள் இணைக்க வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறேன்.

40. இந்திய வருமான வரி சட்டப்படி ஒப்பந்ததாரர் தனது பெயரில் உள்ள நிரந்தர வருமான வரி கணக்கு எண் குறித்த விவரங்கள் ஒன்றியத்தில் சமர்ப்பிக்க வேண்டும் தவறாது இந்திய வருமானவரி சட்டம் பற்றிய விதிமுறைகளை பின்பற்றி ஒவ்வொரு போக்குவரத்து வாடகை கட்டண பில்லிலும் வருமான வரி பிடித்தம் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

41. ஒப்பந்த வாகனம், விபத்து ஏற்பட்டு நிரந்தரமாக இயக்க இயலாத நிலை ஏற்படுமாயின், வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அத்தாட்சிக் கடிதம் பெற்று ஆர்.சி., தமிழ்நாடு பர்மிட் மற்றும் இன்சூரன்ஸ் தனது பெயரில் இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு உடைய மாற்று வாகனத்தை ஒன்றியத்தின் முன் அனுமதியுடன் ஒப்பந்த காலம் வரை இயக்கலாம் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

42. வாகன ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் போது சுங்க வரிக் கட்டணத்தை விலைப்புள்ளியுடன் சேர்த்து அளிக்க வேண்டும். தனியாக சுங்க வரிக்கட்டணம் வழங்கப்படமாட்டாது என்பதை ஒப்புக் கொள்கிறேன்

43. ஒப்பந்ததாரர், பொது மேலாளர், திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அவர்களால் அவ்வப்போது நிர்ணயம் செய்யும் விதிமுறைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

44. போக்குவரத்து கட்டணப் பட்டியல் 15 நாட்களுக்கு ஒரு முறை 3 நகல்களில் 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு 3 நாட்களுக்குள் பெறப்படும் பட்டியல் அடுத்து வரும் 10 நாட்களுக்குள் பட்டுவாடா செய்யப்படும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் பட்டியல்கள் காலம் தாழ்த்தி பட்டுவாடா செய்யப்படும். காலதாமதத்திற்காக ஒப்பந்ததாரர் நட்ட ஈடு கோர இயலாது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

45. ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததுடன் ஒப்பந்தபணி சார்ந்துள்ள அலுவலரிடம் பாக்கியில்லா சான்றுகள் **(No Due Certificate)** சமர்ப்பித்த பின்னரே கடைசி போக்குவரத்து பட்டியல் விடுவிக்கப்படும். மேலும், அந்த ஆண்டின் ஒன்றிய இறுதித் தணிக்கை முடிவுற்ற பின்னரே பிணை வைப்புத்தொகை திரும்ப வழங்கப்படும். இத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

46. ஒப்பந்ததாரர் தமது வாகனங்களை பால்பண்ணை/குளிரூட்டும் நிலைய வளாகத்தில் நிறுத்தி சுத்தம் செய்யவோ, வாகனத்தை கழுவுதலோ கடுமையான தண்டனைக்கு உட்பட்டதாகும். அவ்வாறு கழுவும் பட்சத்தில் ஒவ்வொரு முறைக்கும் ரூ.1000/– அபராதம் விதிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

47. ஒப்பந்ததாரர், ஒப்பந்த காலத்தில், தானாக ஒப்பந்தத்தை ரத்து செய்தாலோ அல்லது ஏதாவது காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டாலோ வாகனம் இயக்கப்படாமல் ஏற்படும் இழப்பிற்கோ அல்லது, வேலை நிறுத்தம், பந்த் மற்றும் இயற்கை சீற்றம் போன்ற எதிர்பாராத காரணங்களினால் வாகனம் இயக்கப்படாமல் போனாலோ, ஒன்றியத்திடமிருந்து எந்தவித இழப்பீடும் கோர முடியாது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

48. <u>ஒப்பந்ததாரர், ஒப்பந்த வாகனத்தை திடீரென்று நிறுத்தி விட்டால்,</u>

| | |
|---|---|
| அ. | பிணை வைப்புத் தொகை முழுவதும் பறி முதல் செய்யப்படும்என்பதை ஒப்புக் கொள்கிறேன். |
| ஆ. | அவ்வாறு நிறுத்தப்படும் நாளில் நிலுவையில் உள்ள போக்குவரத்துக் கட்டணம் விடுவிக்கப்பட மாட்டாது என்பதை ஒப்புக் கொள்கிறேன். |
| இ. | அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டணத்தை விட அதிகமாக ஒன்றியத்தால் செலவிடப்பட்டிருந்தால், ஒப்பந்ததாரர் பெயரில் நிலுவையில் உள்ள போக்குவரத்துக் வாடகை கட்டணத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும். அதையும் விட அதிக செலவினங்களுக்கு ஒப்பந்ததாரரின் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மூலம் வசூல் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். |

49. ஒப்பந்த காலத்தில் டீசல் விலை உயர்வு/குறைவு ஏற்பட்டால் ஒப்பந்த கட்டணத்தில் உயர்வு/குறைவு ஏற்படுத்தப்படும். இந்த ஒப்பந்தக் கட்டணம் உயர்வு/குறைவு ஒப்பந்த வாகனத்தின் கொள்ளளவு மற்றும் திறனுக்கு ஏற்ப கணக்கிடப்படும். ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாளில் உள்ள டீசல் விலை அடிப்படையில் ஒப்பந்தக் கட்டணத்தில் உயர்வு / குறைவு ஏற்படுத்தப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

50. ஒப்பந்த இடைக்காலத்தில் அல்லது ஒன்றியம் நிர்ணயம் மேற்கொள்கிற காலக்கெடு சூழ்நிலைகளில் அரசு டீசல் விலையை உயர்த்தி / குறைத்து நிர்ணயம் செய்யும் சூழ்நிலைகளில் போக்குவரத்துக் கட்டணம் சம்பந்தமாக பொது மேலாளரின் முடிவிற்கு ஒப்புக் கொள்கிறேன்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

51. ஒப்பந்தப்படி நிர்ணயிக்கும் ஒப்பந்தப் புள்ளி தொகைக்கே பால் சேகர வழித்தடம் ஆரம்பிக்கும் நாள் முதல் ஒப்பந்தக்காலம் முடியும் வரையும் அல்லது நிர்வாகக் காரணங்களால் கால நீடிப்பு கொடுத்து செயல்பட தெரிவிக்கும் காலம் வரை அதே ஒப்பந்தப்புள்ளியின் தொகைக்கே ஊர்தியை இயக்க முழு மனதுடன் சம்மதிக்கிறேன்.

52. வாகன உதிரி பாகம் விலை, டயர் விலை, சாலை வரி காப்பீடு செலவினங்கள் போன்றவற்றில் உயர்வுகள் ஏற்பட்டால் ஒன்றியம் அதற்காக எவ்விதத்திலும் வாடகை கட்டணத்தை உயர்த்தி வழங்காது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

53. ஒப்பந்ததாரரின் வாகனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சம்பளம், வருங்கால வைப்புநிதி, ஈ.எஸ்.ஐ போன்ற சட்டபூர்வமான விவகாரங்கள், இது தொடர்பாக கணக்குகள் பராமரிப்பது அனைத்தும் ஒப்பந்ததாரரின் முழுப்பொறுப்பாகும். இது தொடர்பாக ஒன்றியத்திற்கு எவ்வித பொறுப்பும் கிடையாது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

54. ஒப்பந்ததாரர், ஒன்றியத்திலிருந்து சங்கங்களுக்கு அனுப்பப்படும் ட்ரக் ஸ்லிப், ஒப்புதல் கடிதம், பால்பண பட்டுவாடா பட்டியல்களை தவறாமல் சம்பந்தப்படட சங்கங்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டும். அதே போல் சங்கங்களிடமிருந்து ஒன்றியத்திற்கு அனுப்பப்படும் அனைத்து பொருள்களையும் தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும். வாகன டிரிப் ஷீட் மற்றும் இதர சட்டபூர்வ ரிகார்டுகளை ஒப்பந்ததாரர் தன் சொந்த பொறுப்பில் பராமரிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

55. ஒப்பந்த வாகனத்தில் ஒப்பந்ததாரரோ அல்லது அவரின் பிரதிநிதிகளோ பால் திருடுதல் அல்லது வேறு முறைகேடுகள் செய்வது தெரியவருமாயின், அவ் வழித்தடத்தில் ஆரம்ப காலம் முதல் முறைகேடுகள் கண்டு பிடிக்கும் வரை ஏற்பட்ட மொத்த குறைவு அல்லது இழப்பிற்கும் அவரது போக்குவரத்து வாடகை கட்டணத்திலிருந்து பிடித்தம் செய்வதுடன் அன்னாரது ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

56. ஒன்றியத்தில் பணிபுரிபவர்கள், அவர்களது நெருங்கிய உறவினர்கள், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் இந்த ஒப்பந்தத்தில் பங்கேற்க முடியாது, இவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டாலும் பிற்காலத்தில் இது குறித்து தெரிய வரும்போது அவரது ஒப்பந்தம் எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

57. இவ்வொன்றியத்தில் முந்தையக் காலங்களில் ஒப்பந்ததாரராக இருந்து அந்த ஒப்பந்தக் காலத்தில் ஒப்பந்த விதிமுறைகளை மீறியமைக்காக ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டிருந்தால் அந்த ஒப்பந்ததாரர், நேரடியாகவோ, மறைமுகமாகவோ டெண்டரில் கலந்து கொள்ள இயலாது. பின்வரும் ஒப்பந்த காலத்தில் அவ்வாறு தெரிய வந்தால் ஒப்பந்தம் உடனடியாக இரத்து செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

58. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் தனியார் பால் பண்ணையை ஊக்குவிக்கும் காரியங்களில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஈடுபட்டால் அவரின் ஒப்பந்தம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

59. ஒப்பந்த உத்தரவின் அட்டவணைப்படி பால் வழித்தட சங்கங்களில் பாலை சேகரிப்பதும் ஒப்படைப்பதும் அதற்கான அத்தாட்சிகள் பெற்று சங்கங்கள் மற்றும் ஒன்றியத்தில் ஒப்படைப்பதும் ஒப்பந்தக்காரரின் முழுப் பொறுப்பாகும் என்பதையும், வழித்தட வாகனத்தின் ஓட்டுனர் அல்லது நடத்துனர் மூலம் சங்கங்கள் பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பண்ணை ஆகியவற்றிற்கிடையே பட்டுவாடா செய்யப்படும் தபால்களுக்கு ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

60. அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை பொது மேலாளர், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் லிட்., எந்தவித காரணமும் காட்டாமல் 15 நாள் முன்னறிவிப்பு செய்து ரத்து செய்யும் அதிகாரம் படைத்தவர் ஆவார். அவ்வாறு ஒன்றிய நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஒப்பந்தம் ரத்து

ஒப்பந்ததாரர் கையொப்பம்

செய்யப்படும் போது அவ்வழித்தடத்தில் இணைக்கப்பட்டுள்ள எல்லா சங்கங்களிடமிருந்து பாக்கியில்லா சான்று **(No Due Certificate)** பெறப்பட்டு 30 நாட்களுக்கு பின்னர் ஈட்டுறுதி பிணைமுறி **(Indemnity Bond)** அளித்திடுதல் வேண்டும் அதன் பின்னர் ஒன்றியம் நிர்ணயம் செய்த கால அளவில் பிணை வைப்புத் தொகை விடுவிக்கப்படும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

61. ஒப்பந்தக் காலத்தில் மேற்கண்ட நிபந்தனைகளை மீறும்போது டெண்டரை ரத்து செய்யவும் பால் வள மேம்பாட்டுத்துறை அல்லது அரசு / ஒன்றியத்தின் உத்தரவின் பேரில் பால் வழித்தடம் ரத்தாகும்போது ஒப்பந்தமும் ரத்தாகும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

62. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் இருந்தால் பிணை வைப்புத் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தத்துக்கு ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவையும் ஒப்பந்ததாரரே ஏற்க வேண்டும் என்பதையும் ஒப்பந்தத்தை பிறருக்கு விட்டுக் கொடுத்தால் பிணை வைப்புத் தொகையை பறிமுதல் செய்யப்படுவதுடன் மறு ஒப்பந்தம் மேற்கொள்ள ஆகும் செலவினையும் ஒப்பந்தம் எடுத்தவரே ஏற்க வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

63. ஒன்றியத்தில் ஒப்பந்தம் பெறப்பட்டு, ஒப்பந்த வாகனம் இயக்குவது சம்பந்தமாக ஒன்றியத்திற்கு திருப்திகரமாக இல்லாமல் இருப்பின், ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்பதையும் அல்லது குறிப்பிட்ட ஒப்பந்த வாகனம் தேவையில்லை என ஒன்றியம் கருதும்போது ரத்து செய்யப்படலாம் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

64. ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒன்றிய பொது மேலாளரால் ஒப்பந்த இறுதி ஆணை வழங்கப்பட்டப் பின் ஒன்றியம் கொடுக்கும் கால கெடுவுக்குள் ஒப்பந்தப் பத்திரங்கள் எழுதிக் கொடுக்காமலும், வாகனம் இயக்காமலும் இது சம்பந்தமாக ஒன்றியத்துடன் ஒத்துழைக்க மறுத்தாலும் அவர் ஒப்பந்த விதிகளில் கையொப்பம் இட்டபடி அவர் மேல் எல்லாவித நடவடிக்கை எடுக்கவும் இதனால் ஒன்றியத்திற்கு ஏற்படும் அனைத்து நிதி மற்றும் நிர்வாகப் பிரச்சனைகளுக்கு ஒன்றியம் நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

65. ஒப்பந்த ஆணை வழங்கப்பட்டு அதனை நிறைவு செய்யாத பட்சத்தில் முன் வைப்புத் தொகையை இழக்கவும், அதனால் ஒன்றியத்திற்கு ஏற்படும் அனைத்து இழப்பீடுக்கும் பொறுப்பு ஏற்க ஒப்புக் கொள்கிறேன்.

66. மேற்படி ஒப்பந்த விதிகள், தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தம் 1998–ம் ஆண்டு சட்டம் 43 (Act) மற்றும் அதைத் தொடர்ந்து தமிழக அரசால் இயற்றப்பட்ட விதிகள் (Rules) ஆகியவற்றிற்குட்பட்டதாகும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

67. நீதிமன்ற வழக்குகள் திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலிக்கு உட்பட்டது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

68. ஒவ்வொரு முறை பாலை ஏற்றி பண்ணை / குளிரூட்டும் நிலையம் /மொத்த பால் குளிர்விப்பான் நிலையத்தில் சேர்த்த பின்னும் வண்டி சுத்தமாக கழுவப்பட்டு நன்கு துடைக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். சங்கங்களிலிருந்து பெறப்படும் பாலின் அளவு, தரம் முதலியவற்றிற்கான எடை சீட்டை ஒன்றியத்திலிருந்து பெற்று சங்கங்களில் சேர்ப்பதும் ஒப்பந்தக்காரரே முழுப் பொறுப்பு என்பதையும், வாகனத்தில் உட்பகுதியில் விளக்கு பொறுத்தப்பட்டு உள்ளிருக்கும் கேன்கள் மற்றும் இதரப் பொருட்கள் முறையாக இழப்புக்கு இடமின்றி கையாளப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். கேன்களில் பெயர் மற்றும் சங்க அலகு எண் எழுதப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

69. சட்ட ரீதியான நடவடிக்கைகள் / சிவில் நீதி மன்றங்கள் மூலம் / 1983–ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 39–ன் பிரிவு 90–ன் கீழும் அதற்கென ஏற்படுத்தப்பட்ட 1988ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதி 107–ன் படியும் துணைப்பதிவாளர் (பால்பதம்), திருநெல்வேலி அவர்களின் நீதிமன்ற தீர்ப்புக்குட்பட்டவை என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

ஒப்பந்ததாரர் கையொப்பம்

70. எவ்வித காரணத்தை தெரிவிக்காமலும், முன் அறிவிப்பு கொடுக்காமலும் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஒன்றிய பொது மேலாளருக்கு பூரண உரிமை உண்டு என்பதையும் ஒப்புக் கொள்கிறேன்.

71. ஒப்பந்த காலத்தில் ஓடிக் கொண்டிருக்கும் ஒப்பந்த ஊர்தியினை ஒப்பந்தக்காரர் ஒப்பந்தக் காலத்தில் அல்லது ஒன்றியம் அறிவிக்கும் காலத்திற்குள் நிறுத்திக் கொண்டால், டெண்டர்தாரர் தனது பிணை வைப்புத் தொகையை இழப்பதுடன் மறுடெண்டருக்கு ஆகும் செலவும், மறு ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொண்டு அப்பால் வழித்தடத்திற்கு வாகனம் செலுத்தும் காலம் வரை டெண்டர் ரேட்டுக்கு மேலாகும் செலவுத் தொகைக்கு பழைய டெண்டர்தாரரே பொறுப்பாகும் என்பதையும், இந்நட்டம் டெண்டர்தாரருக்கு சேர வேண்டிய பணத்தில் ஈடு செய்யப்படும் என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். மீதி வசூலிக்க வேண்டிய தொகை இருப்பின் சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொண்டு வசூலிக்கவும் ஒப்புக் கொள்கிறேன்.

72. கடிதப் போக்குவரத்து அனைத்தும் பொது மேலாளர், திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், திருநெல்வேலி-7 என்ற முகவரி இடப்பட வேண்டும்.

73. ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட நேரங்கள் ஒன்றிய அலுவலகக் கடிகார நேரத்தையேக் குறிக்கும் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

74. பொது மேலாளரால் நியமிக்கப்படும் குழுவினரால் ஒரு தடவை பால் சேகர வழித்தடத்தில் தூரம் எடுத்த பின் மறுபடி எடுக்க ஒப்பந்தக்காரர் கோரும் பட்சத்தில் அதற்கான முழு செலவுத் தொகையையும் ஒப்பந்தக்காரரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

75. மேற்படி பால் சேகர வாகன ஒப்பந்த நிபந்தனைகள் அனைத்தையும் புத்தி சுவாதீனத்துடனும், சுய நினைவுடனும் ஏற்று ஒப்புதல் அளிக்கிறேன் என உறுதியளிக்கிறேன்.

ஒப்பந்ததாரரின் கையொப்பம்.

சாட்சிகள்:

1.

2.

பொது மேலாளர்,<br>
திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால்<br>
உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (வரையறு),<br>
திருநெல்வேலி–7.